# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 20: பத்துமடங்கு அதிக ஞானம்

**தானியேல் 1:1-21**

### நடந்த கதை . . .

எருசலேம் நகரத்தைக் கைப்பற்றிய பாபிலோன் ராஜா, ஆயிரக்கணக்கான யூதர்களை பாபிலோனுக்குச் சிறைபிடித்துச்சென்றார். திறமையான யூதவாலிபர்களை அரண்மனைக்குக் கொண்டு வந்து, அவர்கள் ராஜாவின் சமூகத்தில் சேவிக்கும்படி பாபிலோனின் ஞானத்தையும் பாஷையையும் மூன்று வருஷமளவும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் தன் ஊழியக்காரன் அஸ்பேனாசுக்கு ராஜா கட்டளையிட்டிருந்தார்.

தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோரையும் அஸ்பேனாஸ் தேர்ந்தெடுத்து, அரண்மனைக்கு அழைத்துச்சென்றான். ஆனால் அங்கு அந்த நால்வருக்கும் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அந்த வாலிபர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவுகளில் தேவன் தடைசெய்திருந்த அநேக உணவு வகைகளும் மதுவும் இருந்தன. தேவனுக்கு நன்றியின்றி நடக்க தானியேலுக்கு விருப்பமில்லை. தனக்கும் தன் மூன்று நண்பர்களுக்கும் காய்கறி உணவும் தண்ணீரும் தரும்படி பணிவுடன் கேட்டார். முதலில் ராஜாவின் பணியாள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. “அவ்வாறு சாப்பிட்டு, நீங்கள் பெலவீனமடைந்தால், ராஜா என் தலையை எடுத்துவிடுவார்” என்றான்.



முதலில் 10 நாட்களுக்குமட்டும் மரக்கறி உணவு தருமாறும், பிறகு ராஜாவின் உணவுகளைச் சாப்பிடுகிற மற்ற வாலிபர்களோடு தங்களை ஒப்பிட்டுப்பார்த்து, முடிவுசெய்யுமாறும் தானியேல் பணிவுடன் வேண்டினார்.

ராஜாவின் பணியாள் அதற்குச் சம்மதித்தான்; அந்த எபிரெய வாலிபர்களுக்கு 10 நாட்களுக்கு, சாப்பிட சாதாரண காய்கறி உணவுகளும் குடிக்கத் தண்ணீரும்மாத்திரமே கொடுத்தான். பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. தானியேல் 1:15.

மூன்று வருடங்களுக்குப் பின்பு ராஜா சோதித்தபோது, தானியேலும் அவருடைய நண்பர்களும் பாபிலோனிலுள்ள சகல ஞானிகளைக் காட்டிலும் 10 மடங்கு அதிக ஞானமுள்ளவர்களாக இருக்கக் கண்டார். சுமார் 100 வருடங்கள் தானியேல் உயிர்வாழ்ந்ததாக வேதாகமம் கூறுகிறது. தானியேலும் அவருடைய நண்பர்களும் அதிக ஞானத்தோடும் ஆரோக்கியத்தோடும் ஆயுளோடும் இருக்க உதவியது எது?

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. ஆதியில் மனிதர்களுக்குத் தேவன் கொடுத்த உணவு என்ன?

**ஆதியாகமம் 1:29.** *பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் __________ தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் __________ மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன் , அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது ... என்றார்.*

### 2. ஆதாம்-ஏவாள் பாவம்செய்த பிறகு, வேறு என்ன உணவு வகையையும் தேவன் கூட்டிக்கொடுத்தார்?

**ஆதியாகமம் 3:18.** *வெளியின் __________ வகைகளைப் புசிப்பாய்.*

**குறிப்பு:** பழங்கள், தானியங்கள், கொட்டைகள் போன்ற தாவர உணவுகளையே ஆதியில் தேவன் மனிதர்களுக்குக் கொடுத்தார். ஆதாம்–ஏவாள் பாவஞ்செய்து, ஜீவ விருட்சத்திலிருந்து புசிக்க முடியாமல் போனபிறகுதான் காய்கறிகளையும் உணவுவகைகளில் சேர்த்தார்.

### 3. நம் உடல்நலனில் தேவனுக்கு அக்கறை உண்டா?

**மத்தேயு 4:23.** *இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடனே ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் __________.*

**3யோவான் 2.** *பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ __________ __________ __________ வேண்டுகிறேன்.*

**குறிப்பு:** நம் உடல்நலத்தில் தேவன் மிகுந்த அக்கறைகாட்டுவதாக வேதாகமம் கூறுகிறது. போதிப்பதிலும், மக்களைக் குணமாக்குவதிலும்தான் இயேசு அதிக நேரம் செலவிட்டார். நம் உடல் நலத்தையும் ஆயுளையும் அதிகரிக்க வேதாகமத்தில் பல நியதிகள் சொல்லப்பட்டுள்ளன.

### 4. இஸ்ரவேல் மக்கள் தம்மைச் சேவித்து, தமக்குக் கீழ்ப்படிந்தால் சகல வியாதிகளையும் அவர்களைவிட்டுத் தாம் விலக்குவதாக தேவன் வாக்குரைத்தார். தேவன் தம் வாக்கைக் காப்பாற்றினாரா?

**சங்கீதம்105:37.** *அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார்; அவர்கள் கோத்திரங்களில் __________ __________ இருந்ததில்லை.*

**குறிப்பு:** தேவ மக்கள் வாக்குத்தத்த தேசத்திற்குள் வந்தபோது அவர்களில் வியாதியானவனோ பெலவீனனோ ஒருவன்கூட இருந்ததில்லை.

### 5. நம் உடல் நலனை தேவன் ஏன் முக்கியமானதாகக் கருதுகிறார்?

**1கொரிந்தியர் 6:19,20.** *உங்கள் சரீரமானது ... பரிசுத்த ஆவியினுடைய __________யிருக்கிற(து) ... உங்கள் __________ ... தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

**ரோமர் 12:1.** *உங்கள் __________ __________ தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*





**குறிப்பு:** நம் சரீரங்கள் தேவன் வாசஞ்செய்யும் பரிசுத்த ஆலயமாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எனவே தேவன் தங்குவதற்கேற்ற ஒரு நல்ல இடமாக அதை நாம் பேணிக் காக்க வேண்டும்.

### 6. ஆரோக்கியமான வாழ்விற்கு வேதாகமம் தரும் ஓர் உன்னத விதி என்ன?

**1கொரிந்தியர் 10:31.** *நீங்கள் __________, __________, எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.*

**குறிப்பு:** நம்முடைய பழக்கவழக்கங்கள், அதாவது நாம் புசிப்பவைகளும் குடிப்பவைகளும்கூட தேவனை மகிமைப்படுத்தும்விதத்தில் இருக்கப் பிரயாசப்படவேண்டும்.

### 7. கிறிஸ்தவர்கள் மதுபானங்கள் அருந்தலாமா?

**நீதிமொழிகள் 20:1.** *திராட்சரசம் __________, __________ அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல.*

**குறிப்பு:** மது பானங்களை வேதாகமம் தடைசெய்கிறது. வேதாகமத்தில் சொல்லப்படும் ‘திராட்சரசமானது’ நொதிக்காத பழச்சாறு ஆகும். இன்று ‘ஆப்பிள் பழச்சாற்றிலும்’ இந்த இரண்டு வகை உள்ளது. நொதித்த திராட்சப்பழச்சாறு பற்றித்தான் நீதி 23:29–30 இல் சொல்லப்பட்டுள்ளது. “அதைக் குடிக்கக்கூடாது; அதைப் பார்க்கவும் கூடாது” என்று தேவன் சொல்லுகிறார். நொதிக்காத, புதிதாகச் செய்யப்பட்ட, இனிப்பான திராட்சப்பழச்சாற்றைத்தான் கிறிஸ்தவர்கள் அருந்தவேண்டும். **ஏசாயா 65:8.** திராட்சக்குலையில் இரசம் காணப்படும். இதை நாம் சாப்பிடலாம்.

### 8. தங்கள் சரீரங்களைக் கெடுக்கிறவர்களை தேவன் என்ன செய்வார்?

**1கொரிந்தியர் 3:16,17.** *நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்க(ள்) ... ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் __________.*

**யாத்திராகமம் 20:13.** __________ *செய்யாதிருப்பாயாக.*

### 9. பாலூட்டிகளில் எவற்றை ஆகாரமாகச் சாப்பிடலாமென்று தேவன் சொல்லியிருக்கிறார்?

**லேவியராகமம் 11:3.** *மிருகங்களில் விரி__________, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் __________மானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.*

**குறிப்பு:** அனைத்துப் பிராணிகளையும் தீட்டுள்ளவை, தீட்டில்லாதவை என்று ஆண்டவர் பிரித்திருக்கிறார். தீட்டில்லாதவற்றை நாம் உண்ணலாமென்றும், தீட்டுள்ளவற்றை உண்ணக்கூடாதென்றும் அவர் சொல்லியிருக்கிறார். தீட்டில்லாத பாலூட்டிகளிடம் இரண்டு தன்மைகள் காணப்படவேண்டும். (1) விரிகுளம்பு இருக்கவேண்டும் (2) அசை போட வேண்டும். உதாரணமாக, பன்றிக்கு விரிகுளம்புண்டு; ஆனால், அசைபோடாது.

### 10. சுத்தமான கடல் உணவுகள், மீன்கள் யாவை?

**லேவியராகமம் 11:9.** *ஜலத்திலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: ... __________ __________ உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.*

**குறிப்பு:** பெரும்பாலான மீன் வகைகள் உண்ணக்கூடியவை. ஆனாலும், விலாங்கு, கெளுத்தி, சுறா போன்றவை தீட்டுள்ளவை. தண்ணீரில் வாழும் ஜந்துக்களில் இறகும் செதிலும் உள்ளவைகளை மட்டுமே உண்ணவேண்டும். ஆமை, தவளை, நத்தை, சிப்பி, இறால் போன்றவை தீட்டுள்ளவை.

### 11. பறவைகளில் அசுத்தமானவை எவை?

**லேவியராகமம் 11:15,16.** *சகலவித காகங்களும், ____________________, ________________, செம்புகமும், சகலவித டேகையும்,*

**குறிப்பு:** மாமிசப்பட்சிணிப் பறவைகள், பிணம்திண்ணிப் பறவைகள், மீன் உண்ணிப் பறவைகள் தீட்டுள்ளவை என்று லேவியராகமம் 11 இல் உள்ளது. தீவனம்போட்டு வளர்க்கக்கூடிய கவுதாரி, கோழி, வான்கோழி போன்றவை தீட்டில்லாதவை.

### 12. சுத்தமான மிருகங்கள், அசுத்தமான மிருகங்கள்பற்றிய சட்டம் மோசேயின் சடங்காச்சாரப் பிரமாணங்களோடு சம்பந்தப்பட்டவையா? அவை சிலுவையோடு முடிந்துவிட்டனவா?

**ஆதியாகம் 7:1,2,3.** *நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; ... நீ ________________ சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், ________________ ________________ ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும் ... சேர்த்துக்கொள்.*

**குறிப்பு:** இல்லை. சிருஷ்டிப்பு முதலே தீட்டுள்ளவை, தீட்டில்லாதவை என்று தேவன் வகை பிரித்திருக்கிறார். தீட்டில்லா மிருகங்களை ஏழு ஜோடுகளும் தீட்டுள்ளவற்றை இரண்டு ஜோடுகளும் பேழைக்குள் சேர்க்கும்படி தேவன் சொன்னார். இதுவெல்லாம் மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே நிகழ்ந்தவை.

### 13. அசுத்தமான உணவுகளை உண்பது மோசமான ஒரு குற்றம் என்று தேவன் சொல்லுகிறாரா?

**ஏசாயா 66:15,17.** *இதோ, தம்முடைய கோபத்தை உக்கிரமாகவும், தம்முடைய கடிந்து கொள்ளுதலை அக்கினி ஜுவாலையாகவும் செலுத்தக் கர்த்தர் அக்கினியோடும் ________________, ... தங்களைத்தாங்களே பரிசுத்தப்படுத்திக்கொள்ளுகிறவர்களும், ... சுத்திரிகரித்துக் கொள்ளுகிறவர்களும், ____________யிறைச்சியையும், அருவப்பானதையும் எலியையும் சாப்பிடுகிறவர்களும் ஏகமாய்ச் ________________________ என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

**குறிப்பு:** ஆமாம்! இது பற்றி மிகத்தெளிவாகவும் விளக்கமாகவும் வேதாகமம் கூறுகிறது. தம் வார்த்தைகளை மீறி, பன்றி இறைச்சி போன்ற தீட்டுள்ள உணவுகளை உண்பவர்களைத் தம்முடைய இரண்டாம் வருகையில் ஆண்டவர் அழிப்பார்.

### 14. கிறிஸ்தவர்களுக்கு நன்மைவிளைவிக்கும் அடிப்படை ஆரோக்கிய விதி என்ன?

**1கொரிந்தியர் 9:25.** *பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் ________________________யிருப்பார்கள்.*

**குறிப்பு:** தீங்கு விளைவிப்பவற்றை முற்றிலும் தவிர்ப்பதும், நன்மையானவற்றை மிதமாகப் பயன்படுத்துவதும்தான் இச்சையடக்கம்.

### 15. வேதாகம ஆரோக்கிய நியதிகள் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கும் பொருந்துமா?

**லேவியராகமம் 13:46.** *அந்த வியாதி அவனில் இருக்கும் நாள்வரைக்கும் தீட்டுள்ளவனாக எண்ணப்படக்கடவன்; ... அவன் ________________ குடியிருக்கவேண்டும்.*

அ. *தனிமைப்படுத்துதல் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கிறது (லேவியராகமம் 13:46).*
ஆ. *மனித உடலின் கழிவுகளைப் புதைக்கவேண்டும். (உபாகமம் 23:12,13).*
இ. *குளிப்பதும், துணி துவைத்து உடுத்துவதும் கிருமிகளைக் கட்டுப்படுத்துகிறது. (லேவியராகமம் 17:15,16).*
ஈ. *பாலியல் நோய்களை ஒழுக்கமான வாழ்க்கை தடுக்கிறது. (லேவியராகமம் 18; நீதிமொழிகள் 5:1-12; கொலோசெயர் 3:5,6).*



உ. *மிருகக்கொழுப்புகளை உண்ணக்கூடாது. (லேவியராகமம் 3:17; 7:22-24).*
ஊ. *பகையும் கசப்பும் உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும். (லேவியராகமம் 19:17,18; நீதிமொழிகள் 15:17; எபிரெயர் 12:14,15).*
எ. *பெருந்தீனி உடல் நலத்திற்குக் கேடு (நீதிமொழிகள் 23:2).*
ஏ. *நம் உடலுக்குப் போதுமான ஓய்வு தேவை. (சங்கீதம் 127:2; மாற்கு 6:31).*
ஐ. *வேலை முக்கியமானது (யாத்திராகமம் 20:9,10; 2தெசேலோனிக்கேயர் 3:10).*
ஒ. *நல்ல மனப்பான்மை நல்ல மருந்து (நீதிமொழிகள் 17:22; 1தீமோத்தேயு 6:6).*
ஓ. *பெற்றோரின் பழக்கவழக்கங்கள் பிள்ளைகளைப் பாதிக்கின்றன (உபாகமம் 12:25; யாத்திராகமம் 20:5).*

### 16. பரலோகத்தில் மக்கள் மிருகங்களைக் கொன்று, உண்பார்களா?

**ஏசாயா 65:25.** *என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு________________, ________________________மில்லையென்றுயென்று கர்த்தர் சொல்லுகிறார்.*

**வெளிப்படுத்தல் 21:4.** *இனி மரணமில்லை.*

**குறிப்பு:** பாவத்தால் ஆதாமும் ஏவாளும் இழந்த அனைத்தும் தேவனுடைய புதிய ராஜ்யத்தில் இடம் பெற்றிருக்கும்; தாவரவகை உணவுமுறையும் அதில் அடங்கும். புதிய பூமியில் மிருகங்கள் கொல்லப்படுவதைக் காணமுடியாது.

### 17. ஆண்டவருக்குப் பிரியமானவிதத்தில் நான் எவ்வாறு என் உணவுப்பழக்கத்தையும் ஆரோக்கிய வாழ்க்கைமுறையையும் மாற்றலாம்?

**எசேக்கியேல் 11:18-20.** *அவர்கள் அங்கே வந்து, அதில் ____________________ __________ அருவருக்கப்படத்தக்கதுமாயிருக்கிறதை எல்லாம் அதிலிருந்து அகற்றுவார்கள் ... அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு , அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ... ______________ ஆவியைக் கொடுப்(பேன்).*

**குறிப்பு:** நாம் தேவனுடைய ஆரோக்கிய விதிகளுக்குக் கீழ்ப்படியத் தீர்மானிக்கும்போது அவர் புதிய ஆவியை நமக்குத் தருகிறார்; ஆரோக்கிய வாழ்க்கைக்கான வல்லமையை அது நமக்குத் தரும்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

தம்முடைய ஆரோக்கிய நியதிகளைக் கைக்கொண்டதற்காக தேவன் தானியேலையும் அவர் நண்பர்களையும் கனப்படுத்தினார்; கிறிஸ்தவ வாழ்வின் ஒரு முக்கிய அம்சம் ஆரோக்கியமான வாழ்க்கை. தேவன் சொல்கிற ஆரோக்கிய நியதிகளைக் கைக்கொண்டு, ஆவியானவர் தங்குகிற ஆலயமாக உங்கள் சரீரங்களைக் காத்துக்கொள்ள நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**பதில்:** ________________________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### பேதுருவின் தரிசனத்தைப் புரிந்துகொள்ளுதல்

ஒரு பெரிய துப்பட்டியைப் போன்ற கூடுபற்றி பேதுரு கண்ட தரிசனத்தை வைத்து (அப் 10:9–28) தீட்டுள்ள உணவுகளைப் புசிக்கலாம் என்று சிலர் நியாயப்படுத்துகிறார்கள். தீட்டுள்ள எதையும் உண்ணலாமென இயேசு தம் சீடர்களுக்குப் போதித்ததை அது காட்டுவதாகக் கூறுகிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு முறை அந்தக் கூண்டு கீழே இறங்கியபோதும், தீட்டுள்ள பிராணிகளை அடித்துப் புசிக்கும்படி பேதுருவிடம் சொல்லப்பட்டது; ஆனால், 'அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும்



அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை' என்று பேதுரு கூறினார். அப்போஸ்தலர் 10:14. மூன்றரை வருடங்கள் இயேசுவின் போதனைகளைக் கூடவேயிருந்து கேட்டவர் பேதுரு; ஆனாலும் தீட்டான உணவுகளை உண்ணலாமென்று அனுமதி வழங்கப்பட்டதுபற்றி சிறு அறிகுறிகூட அவரிடம் காணப்படவில்லை. புசிக்கும்படி அந்தக் கூண்டிலிருந்து எதையும் பேதுரு எடுத்ததாகவும் அந்தக் கனவில் காணப்படவில்லை.

தீட்டுள்ள மிருகங்கள் புசிக்கத்தக்கவையாக மாற்றப்பட்டதைச் சுட்டிக்காட்ட அந்தத் தரிசனம் கொடுக்கப்படவில்லை. அந்தத் தரிசனத்தின் அர்த்தத்தை பேதுருதாமே விளக்குகிறார். 'எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்' வச 28. மீண்டும் வச 34 இல், அந்தத் தரிசனம் கொடுக்கப்பட்ட நோக்கத்தைப் பேதுரு கூறுகிறார். 'தேவன் பட்சபாதமுள்ளவர் அல்லர்.' வச 34.

மிருகங்களின் சுத்திகரிப்புபற்றியல்ல, மனிதர்களின் சுத்திகரிப்புபற்றிய செய்தியை தேவன் பேதுருவுக்குக் காண்பித்தார். 'புறஜாதியார் தீட்டுள்ளவர்கள் என்று சொல்லக்கக்கூடாதென்றும், உலகின் சகல ஜனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்' என்றும் யூதச்சீடர்களுக்கு வலியுறுத்தவே அந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டது.

### ஜெபித்துவிட்டால் உணவு சுத்தமாகிவிடுமா?

பிற்காலங்களில் விசுவாசத்துரோகத்தால் நடக்கும் சில விஷயங்களைப்பற்றி 1தீமோத்தேயு 4:1–5 எச்சரிக்கிறது. பிசாசுகளுக்குச் செவிகொடுத்தல், விவாகம் பண்ணாதிருத்தல், சில உணவுகளை விலக்கும்படி கட்டளையிடுதல் போன்றவை அடங்கும். ஆனால், 'தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது' என்கிற 4 ஆம் வசனம்தான் அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாகத்தான் அந்த வசனம் கூறுகிறது. ஆனால், ஊக்கமாக, ஸ்தோத்திரம் பண்ணி ஜெபித்துவிட்டால் எந்த மிருகத்தையும் உண்ணலாமென அந்த வசனம் சொல்வதாகச் சிலர் நினைக்கிறார்கள். அதாவது, ஜெபித்துவிட்டால் பருந்து, கரப்பான் பூச்சி, எலி, அல்லது வௌவால் போன்ற பிராணிகள் உண்பதற்குச் சிறந்தவையாகிவிடுவதாக அர்த்தம். அப்படி அர்த்தங்காண்பது முட்டாள்த்தனமானது, ஆபத்தானது. 'மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.' கலாத்தியர் 6:7.

யாரும் எந்தத் தவறான தீர்மானங்களுக்கும் வந்துவிடக்கூடாதென்று அதைத் தொடர்ந்து 'அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்' என்று கூறுகிறார். 1தீமோத்தேயு 4:5. முதலில், தேவவசனம் ஒன்றை அங்கீகரிக்கவேண்டும்; அதன்பிறகு ஸ்தோத்திரம்பண்ணி ஜெபித்தல், புசிப்பதற்குப் பரிசுத்தமாக்கப்பட்டதாக இருக்கும். வேதாகமத்தில் தீட்டானதென்று கூறப்பட்டுள்ள உணவுகளைப்பற்றி பவுல் இங்குப் பேசவில்லை; 'விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை' விலக்கினதுபற்றித்தான் அவர் பேசுகிறார். வச 3.

ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கவேண்டிய, தேவன் படைத்துள்ள உணவுகள்பற்றி வேதாகமம் சொல்கிறது. ஆதியாகமம் 1:29; 3:18; லேவியராகமம் 11:1–22. 'விசுவாசிகளுக்கும் சத்தியத்தை அறிந்தவர்களுக்கும்' இவை எழுதப்பட்டுள்ளன. தேவ வார்த்தைதான் சத்தியம். அவருடைய வார்த்தையை 'விசுவாசித்து அறிந்தவர்கள்' மாத்திரமே 'பரிசுத்தமாக்கப்பட்டவைகளுக்கு' நேராக வழிநடத்தப்படுகிறார்கள்; 'ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளவும்' சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தீட்டான உணவுகளை உண்டுவந்தும், தங்களைத் தாங்களே பரிசுத்தப்படுத்திக்கொள்ளுகிறவர்கள்' கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அழிக்கப்படுவார்கள். ஏசாயா 66:15–17.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com